இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர்: கலைஞர் மு. கருணாநிதி
திங்கள்கிழமை 27-10-2025

# பழுதடைந்த இரட்டை இயந்திரம்

பீகார் மாநில சட்டமன்றத் தேர்தல் வரும் நவம்பர் மாதம் நடைபெற உள்ளது. பீகார் சட்டமன்றத் தேர்தலானது, இந்தியாவுக்கே முக்கியமான தேர்தலாக அமைந்துள்ளது.

ஒன்றிய பா.ஜ.க. அரசின் நாற்காலியை கவிழ விடாமல் காப்பாற்றி வருகிறார் பீகார் மாநிலத்தின் முதலமைச்சர் நிதிஷ்குமார். அவரது தோளில் தான் பீகாரில் பா.ஜ.க. பயணம் செய்கிறது. இரண்டு கட்சிகளும் சமஅளவில் தொகுதியைப் பிரித்து போட்டி இடுகின்றன. தங்களைப் பற்றி பேசுவதை விட லாலு பிரசாத் கட்சியைப் பற்றி அவதூறு பேசுவதையே பா.ஜ.க.வும் நிதிஷ் கட்சியும் செய்து வருகின்றன.

‘இந்தியா’ கூட்டணியின் வலிமையான கட்சிகளாக காங்கிரஸ் கட்சியும், லாலுவின் ராஷ்ட்ரீய ஜனதா தளம் கட்சியும் உள்ளன. ராகுல் காந்தியும் தேஜஸ்வீயும் ‘இரு சகோதரர்கள்’ போல சில மாதங்களாக பீகாரில் வலம் வந்து கொண்டிருக்கிறார்கள். இந்தக் காட்சிகளுக்கு கிடைக்கும் மக்கள் ஆதரவை பா.ஜ.க.வால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

இந்தியா கூட்டணி நிலைக்காது, ராகுலுக்கும் தேஜஸ்வீக்கும் பிரச்சினை, தேஜஸ்வீயை முதலமைச்சர் வேட்பாளராக அறிவிக்க மறுக்கிறார் ராகுல்... என்றெல்லாம் சில வாரங்களாக அவதூறுகளையும் வதந்திகளையும் விதைத்து ‘இந்தியா’ கூட்டணியை பலவீனப்படுத்தி வந்தது பா.ஜ.க.

இவர்களது ஆசையில் மண்ணைப் போட்டது ‘இந்தியா’ கூட்டணி. தேஜஸ்வீயை முதலமைச்சர் வேட்பாளராக ‘இந்தியா’ கூட்டணி அறிவித்தது. ஆர்.ஜே.டி., காங்கிரஸ், ஜே.டி.யு., இடதுசாரி கட்சிகள் சேர்ந்த வலிமையான அணியாக உருவாகி உள்ளது. “நாங்கள் அரசாங்கத்தை அமைக்க மட்டுமல்ல, பீகாரின் வளர்ச்சிக்காகப் பணியாற்றவும் கைகோர்த்துள்ளோம்.” என்று சொல்லி இருக்கிறார் தேஜஸ்வீ.

“அந்த கூட்டணியின் முதல்வர் வேட்பாளர் யார்? நிதீஷ் குமார் தலைமையில் தேர்தலை சந்திக்கப் போவதாக அவர்கள் தெரிவித்துள்ளனர். மகாராஷ்டிராவில்கூட ஏக்நாத் ஷிண்டே தலைமையில் தேர்தலை எதிர்கொண்டார்கள். பின்பு வேறு ஒருவர் முதல்வர் ஆனதைப் பார்த்தோம். தேசிய ஜனநாயகக் கூட்டணியின் முதல்வர் வேட்பாளர் அறிவிக்கப்படவில்லை. நிதிஷ் குமாரை பா.ஜ.க.வினர் முதல்வராக்கப் போவதில்லை. அவர்கள் தேர்தலுக்குப் பிறகு ஐக்கிய ஜனதா தளத்தையும் அழித்து விடுவார்கள்” என்று தேஜஸ்வீ பரப்புரை செய்து வருவது பீகார் மக்களிடம் நன்கு எடுபட்டு வருகிறது.

பீகாரில் வேலை வாய்ப்பு தான் பெரிய பிரச்சினையாக இருக்கிறது. அதனையே தனது வாக்குறுதியாக தேஜஸ்வீ கொடுத்துள்ளார்.

**“பீகாரில் இந்தியா கூட்டணி ஆட்சிக்கு வந்தால், ஒவ்வொரு குடும்பத்திலும் குறைந்தபட்சம் ஒருவருக்கு அரசு வேலை கிடைக்கச் செய்வதற்கான சட்டத்தை 20 நாட்களுக்குள் நிறைவேற்றுவோம். அந்த சட்டத்தின் அடிப்படையில் 20 மாதங்களுக்குள் அனைத்து ஆட்சேர்ப்பு பணிகளையும் முடிப்போம்” என்று அறிவித்துள்ளார். “அரசு வேலை என்றால் அலுவலகம் ஒன்றில் மட்டும் வேலை இல்லை. சுகாதாரம், கல்வி, விவசாயம், கட்டுமானம், சமூக நலன் போன்ற துறைகளில் பெரும் பணியிடங்கள் உருவாக்கப்படும். மாநிலத்தின் நிதியையும் மாற்றியமைத்து இதைச் செய்ய முடியும்” என அவர் சொல்லி இருக்கிறார்.**

தேஜஸ்வீயை முதலமைச்சர் வேட்பாளராக அறிவித்தது பா.ஜ.க.வை திணறடித்துள்ளது. பா.ஜ.க.வின் இரட்டை எஞ்சின் பேச்சு எடுபடவில்லை. “எதிர்வரும் தேர்தலானது யாரை சட்டமன்ற உறுப்பினராக, அமைச்சராக அல்லது முதல் மந்திரியாக ஆக்க வேண்டும் என்பதைப் பற்றியது அல்ல. பீகாரில் காட்டாட்சி திரும்புமா அல்லது மாநிலம் வளர்ச்சிப் பாதையில் தொடருமா என்பதை இந்த தேர்தல் தீர்மானிக்கும். லாலு-ராப்ரி அரசாங்கம் அமைந்தால், காட்டாட்சி மட்டுமே வரும், அதே சமயம் தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சிக்கு வந்தால், பீகார் மாநிலம் வளர்ச்சியடைந்து, நாடு முழுவதும் தனது அடையாளத்தை பதிக்கும்.” என்று அமித்ஷா சொல்லி இருக்கிறார்.

**பா.ஜ.க.வின் முழக்கங்களில் ஒன்று இரட்டை எஞ்சின் ஆகும். இதனைக் கடுமையாக விமர்சித்துள்ளார் தேஜஸ்வீ. “ஒரு எஞ்சின் ஊழல், மற்றொரு எஞ்சின் குற்றம்” என்று சொல்லி இருக்கிறார் தேஜஸ்வீ.**

இதுவரை நிதிஷ்குமார், பா.ஜ.க. ஆட்சி பீகாருக்கு என்ன செய்தது? பீகார் மாநில முதலமைச்சராக பத்து ஆண்டுகள் ஆட்சி செய்தும் அவர் மாநிலத்தை முன்னேற்றவில்லை.அவரது ஆட்சியில் பீகார் அனைத்துத் துறையிலும் பின்தங்கிய நிலையிலேயே இருக்கிறது.

**பீகார் இந்தியாவில் மிகக் குறைந்த நகர்மயமாக்கப்பட்ட மாநிலமாக இருக்கிறது. கடந்த இருபது ஆண்டுகளாகவே எந்த முன்னேற்றமும் இல்லை என்கிறது ஒரு புள்ளிவிபரம். பீகாரின் வளர்ச்சித் துறை மிகமிகப் பின் தங்கி உள்ளது. பீகாரில் இளைஞர்கள் வேலை இல்லாமல் இருப்பது தேசிய விழுக்காட்டை விட அதிகமாக உள்ளது. பீகாரில் வேலை வாய்ப்பு குறைவாக இருப்பதால் பலர் வேலை தேடுவதில் கூட ஆர்வம் இல்லாமல் இருக்கிறார்களாம். பீகாரில் இளைஞர்கள் அதிகம். அவர்களுக்கான எந்தத் திட்டத்தையும் ஒன்றிய பா.ஜ.க. அரசும் உருவாக்கவில்லை. நிதிஷ்குமார் அரசும் உருவாக்கவில்லை.**

நடுநிலைப் பள்ளியை விட்டு பள்ளிப் பிள்ளைகள் விலகுவது தேசிய சராசரியை விட ஐந்து மடங்கு அதிகம் ஆகும். தேசிய விழுக்காடு என்பது 5.20 ஆகும். ஆனால் பீகார் 25.90 விழுக்காடு ஆகும். கல்வி, தொழில், நகர்மயமாக்கல், வருமானம் ஆகிய அனைத்திலும் பீகார் மாநிலம் மிகமிகப்பின்தங்கிஇருப்பதாக‘டைம்ஸ்ஆப்இந்தியா’புள்ளிவிபரங்களுடன் பட்டியலிட்டுள்ளது.

**இதன் பிறகும் இரட்டை எஞ்சின் அரசு என்று பிரதமர் மோடியும், அமைச்சர் அமித்ஷாவும் சொல்வது கேலிக்குரியது மட்டுமல்ல, மக்களை ஏய்ப்பது ஆகும். பா.ஜ.க. ஆட்சி இயந்திரம் என்பது எப்போதும் பழுதடைந்த இயந்திரம்தான். வகுப்புவாத எண்ணமும் பிளவுவாதமும்தான் அவர்களிடன் செயல்படும். மற்ற அனைத்து பாகமும் என்றும் எப்போதும் வேலை செய்யாது.**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (26.10.2025) சென்னை, சீனிவாசபுரம் அருகில் அடையாறு ஆறு கடலில் கலக்கும் முகத்துவாரத்தை தூர்வாரி அகலப்படுத்தும் பணிகளை மீண்டும் ஆய்வு செய்து, பணிகளை போர்க்கால அடிப்படையில் மேற்கொண்டு இரண்டு நாட்களுக்குள் நிறைவு செய்திடுமாறு அலுவலர்களுக்கு உத்தரவிட்டார். இந்த ஆய்வின்போது, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் மா.சுப்ரமணியன், மரு.நா.எழிலன் எம்.எல்.ஏ. அரசு அதிகாரிகள் உடனிருந்தனர்.

## அடையாறு முகத்துவாரத்தில்

# முதல்வர் மு.க.ஸ்டாலின் மீண்டும் நேரில் ஆய்வு!

## பணிகளை விரைந்து நிறைவு செய்ய அதிகாரிகளுக்கு உத்தரவு!

**சென்னை, அக். 27 -**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அடையாறு ஆறு கடலில் கலக்கும் முகத்துவாரத்தை தூர்வாரி அகலப்படுத்தும் பணிகளை மீண்டும் நேரில் ஆய்வு செய்து பணிகளை போர்க்கால அடிப்படையில் மேற்கொண்டு இரண்டு நாட்களுக்குள் விரைந்து நிறைவு செய்ய அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.**

வடகிழக்கு பருவ மழையை யொட்டி, கடந்த 19.10.2025 அன்று சென்னை, எழிலகத்தில் உள்ள மாநில அவசரகால செயல்பாட்டு மையத்திலிருந்து திருவாரூர், தென்காசி, விருதுநகர், இராமநாதபுரம், தேனி, கோயம்புத்தூர் மற்றும் நீலகிரி ஆகிய மாவட்டங்களில் பெய்துவரும் கனமழையால் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

மேலும், 21.10.2025 அன்று தலைமைச் செயலகத்திலிருந்து, திருவள்ளூர், சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு மற்றும் டெல்டா மாவட்டங்களான மயிலாடுதுறை, நாகப்பட்டினம், திருவாரூர் மற்றும் தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆய்வு மேற்கொண்டு, விவசாய பெருங்குடி மக்கள் பாதிக்கப்படாத வகையில் நெல் கொள்முதல் பணிகளை விரைந்து மேற்கொண்டு, மழையால் நெல் மூட்டைகள் சேதம் அடையாமல் பாதுகாத்திடவும், கொள்முதல் செய்யப்பட்ட நெல் மூட்டைகளை விரைந்து கிடங்குகளுக்கு கொண்டு செல்லவும் அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

24.10.2025 அன்று சென்னை, சீனிவாசபுரம் அருகில் அடையாறு ஆறு கடலில் கலக்கும் முகத்து வாரத்தில் நடைபெற்றுவரும் தூர்வாரும் பணிகளை முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு, ஆய்வு செய்து முகத்துவாரத்தை அகலப்படுத்தும் பணிகளை விரைந்து முடித்திடுமாறு அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.



### விரைந்து தூர் வாரிட வேண்டும்!

அதைத்தொடர்ந்து, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (26.10.2025) அடையாறு ஆற்றின் முகத்துவாரத்தை தூர்வாரி அகலப்படுத்தும் பணிகளை மீண்டும் ஆய்வு செய்தபோது, பணிகளை போர்க்கால அடிப்படையில் விரைந்து மேற்கொண்டு இரண்டு நாட்களுக்குள் நிறைவு செய்திடுமாறு அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

முதலமைச்சர் அவர்கள் அடையாறு ஆற்றின் முகத்துவாரத்தை சுமார் 150 மீட்டர் அகலப்படுத்த ஏற்கனவே அறிவுறுத்தியிருந்த நிலையில், நேற்று மீண்டும் ஆய்வுமேற்கொண்டபோது, 200 மீட்டர் அகலத்திற்கு போர்க்கால அடிப்படையில் விரைந்து தூர்வாரி அகலப்படுத்த அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

### மண் திட்டுகளை அகற்றிட வேண்டும்!

முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, படிப்படியாக இயந்திரங்கள் எண்ணிக்கை உயர்த்தப்பட்டு, தற்போது 14 பொக்லைன் இயந்திரங்களும், 4 ஜே.சி.பி. (JCB) இயந்தி ரங்களுடன் அடையாறு ஆற்றின் முகத்துவாரப் பகுதியில் மண் திட்டுகளை அகற்றி அகலப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகிறது. இப்பணிகளை இரண்டு நாட்களுக்குள் விரைந்து முடித்திடவும், நீர்வளத் துறை மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் தொடர் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் உத்தரவிட்டார்.

இப்பணிகளை விரைவுப்படுத்திட, கூடுதலாக களப் பொறியாளர்களை ஈடுபடுத்தி தூர்வாரி அகலப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

மேலும் கூவம், முட்டுக்காடு, எண்ணூரில் கொசஸ்தலையாறு ஆகிய பகுதிகளில் உள்ள முகத்துவாரப் பகுதிகளையும் தூர்வாரி, அகலப்படுத்த வேண்டும் என்றும் அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

இந்த ஆய்வின்போது, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்ரமணியன், சட்டமன்ற உறுப்பினர் மரு. நா.எழிலன், நீர்வளத்துறை செயலாளர் ஜெ.ஜெயகாந்தன் பெருநகர சென்னை மாநகராட்சி தெற்கு வட்டார துணை ஆணையாளர் அஃதாப் ரசூல், நீர்வளத்துறை தலைமைப்பொறியாளர் பொதுபணி திலகம் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

## அமைச்சர் துரைமுருகன் தலைமை! எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி. நடத்தி வைக்கிறார்!

# தலைமைக் கழகப் பேச்சாளர் எழும்பூர் மோ.கோபி இல்ல மணவிழா!

## அமைச்சர்கள் மு.பெ.சாமிநாதன் – மா.சுப்பிரமணியன் – தா.மோ.அன்பரசன் – முன்னணியினர் வாழ்த்து!

*சென்னை, அக்.27-*

*தலைமைக் கழகப் பேச்சாளர் எழும்பூர் மோ.கோபி - கோ.ரமாதேவி ஆகியோரின் புதல்வி கோ.சாய்லட்சுமி என்கிற சாலினி - எம். மனோஜ்ராஜ் ஆகியோரின் மணவிழா இன்று (27.10.2025 - திங்கட்கிழமை) காலை 9 மணிக்கு சென்னை, திருவொற்றியூர் சௌந்தரபாண்டியன் நகரில் உள்ள வி.கே.மகாலில் நடைபெறுகின்றது. அதனைத் தொடர்ந்து பகல் 12 மணியளவில் மணவிழா வரவேற்பு நிகழ்ச்சி யும் நடைபெறுகின்றது.*

*மண விழாவில் கழகப் பொதுச் செயலாளர் - அமைச்சர் துரைமுருகன் அவர்கள் தலைமை வகிக்கிறார்.*

*திருமணத்தை கழக கொள்கை பரப்பு செயலாளர், உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர் ஜெகத்ரட்சகன் எம்.பி. நடத்தி வைக்கிறார்.*

*அமைச்சர்கள் மு.பெ. சாமிநாதன், மா.சுப்பிரமணியன், தா.மோ.அன்பரசன் மற்றும் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ., செஞ்சி கே.எஸ்.மஸ்தான் எம்.எல்.ஏ., தயாநிதி மாறன் எம்.பி., காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட கழக செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ., கலாநிதி வீராசாமி எம்.பி., திருவள்ளூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளர் ரமேஷ் ராஜ், எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ., சென்னை மேற்கு மாவட்ட கழக செயலாளர் தே.சிற்றரசு எம்.சி., டி.ஜெ.கோவிந்தராஜ் எம்.எல்.ஏ., எபினேசர் எம்.எல்.ஏ., தி.மு.தனியரசு எம்.சி., ஏ.வி.ஆறுமுகம் எம்.சி., அருள் தாஸ் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.*

*மாநில மீனவர் அணி துணைத் தலைவர் கே.பி. சங்கர் எம்.எல்.ஏ., ஐட்ரீம் மூர்த்தி எம்.எல்.ஏ., எழும்பூர் கோபிநாத் ஆகியோர் வரவேற்றுப் பேசுகின்றனர்.*

*மணமக்களை டி.ஆர். பாலு, அமைச்சர் கே.என். நேரு, கனிமொழி கருணாநிதி எம்.பி., அமைச்சர் ஐ.பெரியசாமி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் திருச்சி சிவா, அ.ராசா, அந்தியூர் செல்வராஜ் மற்றும் ஆர்.எஸ்.பாரதி, அன்பகம் கலை, ஆஸ்டின், தாயகம் கவி, பூச்சி முருகன், துறைமுகம் காஜா, பத்மநாபன், தனபால் உள்பட அமைச்சர் பெருமக்கள்,*

*மாவட்ட கழக செயலாளர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைக் கழக சொற்பொழிவாளர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், அனைத்து அணியின் மாநில, மாவட்ட, நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்ட, கிளைச் செயலாளர்கள், நிர்வாகிகள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.*




துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (26.10.2025) சென்னை நேப்பியர் பாலம் அருகே இந்திய மருத்துவ சங்கத்தின் சென்னை கோடம்பாக்கம் கிளை சார்பில் நடைபெற்ற எலும்பு அடர்த்தி குறைவதால் ஏற்படும் எலும்பு பலவீனம் (ஆஸ்டியோபோரோசிஸ்), இரத்த ஓட்டம் குறைவதால் ஏற்படும் பக்கவாதம், உடல் பருமனால் ஏற்படும் நோய்கள் குறித்த விழிப்புணர்வு ஓட்டத்தை கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் இந்திய மருத்துவ சங்கத்தின் சென்னை கோடம்பாக்கம் கிளையின் தலைவர் மரு. எஸ்.எஸ்.கே.சந்தீப், செயலாளர் மரு. பிரியா கண்ணன், மரு. மீனாட்சி சுந்தரம் உள்பட மருத்துவர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.